**சுருக்கம்**

நினைவு வளைவு – சேலம் மாவட்டம் ஆத்தூர் நகராட்சி புதிய பேருந்து நிலையத்திற்கு, "பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையம்" என பெயர் வைக்கவும் பேருந்து நிலைய நுழைவு வாயிலில் "பெருந்தலைவர் காமராஜர் நினைவு வளைவு" அமைக்கவும் அனுமதி அளித்தல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை

அரசாணை (நிலை) எண்.195 நாள்: 13-10–2009

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.573, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14.12.2001
2. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் கடிதம் ந.க.எண்.1085/2003 சி.3, நாள் 30.6.2008
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித ந.க.எண்.37618/2008/எம்2, நாள் 25.8.2009 மற்றும் 12.9.2009

****

**ஆணை :**

நகராட்சி நிர்வாக இயக்குநர் தமது கடிதத்தில் ஆத்தூர் நகராட்சி ஆணையர் அவர்கள். ஆத்தூர் நகராட்சியில் பழைய பேருந்து நிலையம். பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையம் என்று இயங்கி வந்ததாகவும், தற்போது புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளதால், பழைய பேருந்து நிலையம் இயங்கவில்லை எனவும், அப்புதிய பேருந்து நிலையத்திற்கு "பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையம்" எனப் பெயர் சூட்டவும் பேருந்துகள் வெளிவரும் வாயிலில் நினைவு வளைவு அமைக்கவும் ஆத்தூர் நகர்மன்றம் தீர்மானம் எண்.269, நாள் 17.7.2006–ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2) சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் தனது இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், புதிய பேருந்து நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பெயரில் நினைவு வளைவு அமைக்கப்பட்டால், போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் எந்தவிதமான இடையூறுகளும் ஏற்பட வாய்ப்பில்லை என காவல்துறை கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளதாகவும், சேலம் வருவாய் வட்டாட்சியர், புதிய பேருந்து நிலைய நுழைவாயிலில் நினைவு வளைவு அமைக்க அனுமதி வழங்குவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனத் தெரிவித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

3) ஆத்தூர் வட்டம் மற்றும் நகரம் புதிய பேருந்து நிலையம் அமைந்துள்ள நகர பழைய புல எண்.512/8B பாகம் புதிய புல எண் வார்டு D.S. பிளாக் 18 புல எண்.3–ல் விஸ்தீரணம் 0.1756.0 ச. மீட்டர் இடமானது நகராட்சி ஆணையாளரின் பெயரில் பட்டா பதிவாகி உள்ளதாகவும், மேற்கண்ட பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் வெளிவரும் 18.6 மீட்டர் அகலமுள்ள நுழைவு வாயிலில் வளைவினை அமைத்து பெருந்தலைவர் காமராஜர் பெயர் எழுத அனுமதி அளிக்கலாம் என சேலம் வருவாய் வட்டாட்சியர் தெரிவித்துள்ளார்.

4) ஆத்தூர் நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர், மேற்படி சாலை, நகராட்சி சாலை என்பதால், இதற்கான தடையில்லா சான்று நெடுஞ்சாலைத்துறை மூலம் வழங்க வேண்டியது இல்லை என தெரிவித்துள்ளதாகவும், சேலம் கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலர், நகராட்சி புதிய பேருந்து நிலையத்தின் நுழைவு வாயிலில் நினைவு வளைவு அமைத்துக் கொள்ளலாம் என பரிந்துரை செய்து, மேற்படி நினைவு வாளைவு அமைக்கத் தடை ஏதுமில்லை எனத் தெரிவித்துள்ளார். ஆகவே, ஆத்தூர் நகராட்சியில் புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையம் என பெயர் வைக்கவும் பேருந்துகள் வெளிவரும் வாயிலில் பெருந்தலைவர் காமராஜர் பெயரில் நினைவு வளைவு அமைக்கவும் அனுமதி கோரும் ஆத்தூர் நகராட்சி ஆணையர் கருத்துருவை மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்துள்ளதாகவும் குறிப்பிட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அதனை ஏற்க அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரின் கருத்துருக்களை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து சேலம் மாவட்டம், ஆத்தூர் நகராட்சியில் புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்திற்கு "பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையம்" என பெயர் வைக்கவும் பேருந்து நிலைய நுழைவு வாயிலில், ''பெருந்தலைவர் காமராஜர் நினைவு வளைவு'' அமைக்கவும் அரசாணை (நிலை) எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை, நாள் 20.11.1998–ல் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு ஆத்தூர் நகராட்சி ஆணையருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. '

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் மாவட்டம், சேலம்.
ஆணையாளர், ஆத்தூர் நகராட்சி, சேலம் மாவட்டம்.

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு செயலரின் தனிச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந–2) துறை. சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

./ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.